**Minutes of the Public Hearing meeting held on 29.01.2019 at 11.00 A.M. for the proposed M/s. V.V. Cements Private Limited, Cement manufacturing plant (600TPD) at Panchayat Community hall located at Vayalur Village, Krishanarayapuram Taluk, Karur District:**

**PRESENT**

1. Thiru.S. Suryaprakash,
   District Revenue Officer
   Karur District.
2. Thiru. K. Ravichandran,
   District Environmental Engineer
   Tamil Nadu Pollution Control Board
   Karur.
3. Thiru. M. Liyagath,
   Revenue Divisional Officer,
   Kulithalai.
4. Thiru. R. Sekar,
   Tahsildhar,
   Krishnarayapuram Taluk.
5. Thiru. S. Vijayabaskar,
   Director, M/s. V.V. Cements Private Limited

and public gathered at the meeting (List enclosed).

**The District Environmental Engineer :**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Karur, welcomed the District Revenue Officer, Revenue Divisional Officer, Tahsildhar, Project Proponent and the Public gathered to Participate in the Public Hearing meeting. He also added that as per the EIA Notification, 2006, this proposed project has to obtain the Environmental clearance from the State Level Environment Impact Assessment Authority - Tamil Nadu. The SEIAA has directed the project proponent to conduct Public Hearing. He also briefed about the process, impact of pollution from the modern cement plants and the pollution control measures to be adopted by the industries. He also added that Tamil Nadu Pollution Control Board is continuously and efficiently monitoring all the polluting industries. He informed that the notification for the Public Hearing was already published on 28.12.2018 in Tamil and English dailies and subsequently wide publicity for the meeting was given by placing notice board at important places in the Villages in and around the proposed project site. Also he added that the intimation on Public Hearing was displayed in Tamil Nadu Pollution Control Board Website and in social media. Then he requested the District Revenue Officer to preside over the meeting and to conduct the Public Hearing. As per the advice of the District Revenue Officer, he requested the project proponent to brief about the project.

**Thiru. S. Vijayabaskar, Director, M/s. V.V. Cements Private Limited:**

He welcomed the public gathered to the meeting. He informed that their management was already running a mini cement plant and has proposed to establish the new one in that area. He also added that the Public Hearing Process is carried out as per the direction and guidelines framed by State Level Environment Impact Assessment Authority- Tamil Nadu. He also assured that employment opportunity will be given either directly or indirectly for the educated local public. He also requested the public to extend their support for the proposed project.

**Thiru. Varadharajan, Environmental Consultant, M/s. V.V. Cements Private Limited :**

He explained about the proposed project as follows with aid of the power point presentation,

- He informed about the location and extent of the project.
- He explained about the proposed project with respect to their capacity, coal consumption, ash generation, Air pollution control measures, Man power requirement, water requirement, details of industrial effluent generation, Treatment and disposal details, Cost of the project and Environmental Status.

**District Revenue Officer:**

In his address he welcomed the gathering. He assured the public that all the positive and negative opinion on the proposed project may be given and their views will be recorded and submitted to Government. He also added that earlier in 1972, a conference on Environmental issues was held at Stockholm and Former Indian Prime Minister Mrs. Indira Gandhi has also participated in the conference and addressed the conference. Later in continuation of the above, a separate Department of Environment was formed. He also added that later, the name of the Department was revised as Ministry of Environment and Forest. He also informed that Former Tamil Nadu Chief Minister has given top priority to protect and preserve the water bodies. He also added that globally there is great awareness among the public on Sustainable Development in recent times. He also informed that globally conference on Sustainable Development was held at various places once in ten years for the past four decades. He also narrated that every industrial actives has its own merits and demerits and steps to be taken to convert demerits in to merits. He also added that all the policy decision by the Government are taken based on the merits and demerits. He also added that the Public Hearing is a forum for sharing the opinion of public over the proposed project and the public shall avoid aggressive arguments. He also added that the proposed project will definitely improve the Socio Economic status of the people in that area. He suggested that if any objection for the proposed project is given it should be given with substantial evidence. He also added that as per the idea conceived by the Former Tamil Nadu Chief Minister Global Investors Meet is

conducted once in two years for the growth of the industrial sector in the state. The last GIM was held in the year 2015 and then it was conducted in 2019.Further he added that all positive and negative views of the public will be recorded and submitted to the Government. Then he requested the public to give their opinion one by one about the proposed project.

**1. Thiru. Mani, Panjapatti:**

He said that Vayalur, Veeriyampalam and Pappakapatti are located in a very dry terrain and people mainly rely on monsoon rainfall for their agricultural activities. He also added that their block has no any industrial backup and a considerable quantum of people are mainly depending on the textile export units located at Karur town for the source of income. He also added that the establishment of the proposed project will definitely improve their livelihood .He welcomed the project.

**2. Thiru. Nagarajan Kadavur:**

In his statement, he narrated that, earlier a cement manufacturing unit at Karikali Village has given lot of assurance to the public in a similar meeting. But so far they have not fulfilled their assurances. He also added that people have to move legally for their remedy. He also requested that the Project proponent to offer a considerable employment opportunity either directly or indirectly for the educated local youth. He also requested that District administration to implement scheme to fill the Pasnjappatti Lake with Cauvery water. He welcomed the project.

**3. Thiru. Subramaniyan Vayalur:**

He requested that District administration to formulate scheme like in Andra Pradesh to fill Panjappatti Lake with Cauvery water so as to make that area fertile. He also added that the proposed project shall ensure a safe environment. He welcomed the project.

**4. Thiru. Muthamilselvan,Surakkapatti:**

During his speech, he said that he is living nearby the project site and the unit authority has skipped their village name Surakkapatty and Ayyampalayam in the EIA study. He also added that their Village will defiantly get affected due to the emission from the proposed project. He also raised a question that already their area is comprised of illiterate and unskilled people, how come the unit authority will offer suitable employment offer. He also requested that the unit authority shall ensure safe and good environment. He requested that District administration shall make necessary arrangement to fill the Panjappatti Lake with Cauvery water , so as to make that area fertlie. He welcomed the project.

**5. Thiru. Rajalinkam Uppiliyappati:**

He informed that his land is located adjacent to the proposed project site and expressed his fear that approach road to his land may be blocked and requested the District Administration to take necessary action in that issue. District Revenue Officer assured that his request will be considered.

**6. Thiru.C. Thangavel Naduppatti:**

He requested that the unit authority shall ensure safe and good environment. He requested that District Administration shall formulate scheme to fill the Panjappatti Lake with Cauvery water, so as to make that area fertile. He welcomed the project.

**7. Thiru. Palanisamy, Karuppathur:**

He welcomed the project. He also added that earlier people have offered their land for Reliance Industry. Later that unit authority has exploited the ground water by providing more number of bore wells. He requested that District Administration shall make necessary arrangement to fill the Panjappatti Lake with Cauvery water, so as to make that area fertile. He welcomed the project.

**8. Thiru.Subramani Vayalur:**

He also requested that the Project proponent to offer a considerable employment opportunity either directly or indirectly for the educated youth from the nearby Villages. He also requested that District Administration shall make necessary arrangement to fill the Panjappatti Lake with Cauvery water. He welcomed the project.

**9. Thiru. Shanmugam Karur**

During his address, he emphasized that the intimation for the public hearing was not given properly. He also added that the proposed project will create adverse effect such as pollution, global warming and health problems to the public, livestock and the surrounding environment. He also added that the technical details in the draft Environment Impact Assessment report were not clearly mentioned. He also added that Coal and Lime stone for the proposed project is proposed import from foreign countries and raised a question that how come the project proponent shall carry out the logistics of this same. He opposed the project.

**10. Thiru. Balasubramani Naduppatti**

He emphasized during his address that the intimation for the public hearing is not widely spread. He insisted that the intimation shall be carried out widely and the public hearing may be conducted at a later date.

**11. Thiru. Veeramalai ,Vayalur:**

He requested that the District Administration shall make necessary arrangements to provide check dam across Pungaru. He also insisted that big bore wells should not be made in the proposed project. He also requested that the Project proponent to offer a considerable employment opportunity either directly or indirectly for the educated youth from the nearby Villages. He welcomed the project.

**12. Thiru Tamilselvan ,Veeranampatti:**

He informed that the surrounding villages will get affected due to the establishment of the proposed project and suggested that alternate non polluting Textile based industry may be proposed instead of cement plant. He requested that District Administration shall make necessary arrangement to fill the Panjappatti Lake , so as to make that area fertile. He welcomed the project.

**13. Thiru Siva ,Vayalur:**

He cautioned that already their area is with water scarcity and the establishment of the proposed project will definitely exploit the fertility of the land. He also requested to make sufficient transport facility to their village.

**14. Thiru Sivakumar ,Munayanur:**

He informed that the surrounding villages will get affected due to the establishment of the proposed project and suggested that alternate non polluting Textile based industry may be proposed instead of cement plant. He opposed the project.

**15. Thiru Saravanan,Veeriyapalayam:**

He emphasized during his address that the intimation for the public hearing was not given properly. and insisted to carry out the public hearing meeting after wide publicity. He also cautioned that the surrounding villages will get affected due to the establishment of the proposed project and suggested that alternate non polluting Textile based industry may be proposed instead of cement plant there by providing employment for more number of unskilled labours. He suggested that District Administration shall reconsider the proposal.

**16. Thiru Karthick,Vayalur:**

He doubtfully questioned about the possibility of 55KLD of water requirement for the proposed project in that dry location. He emphasized that the intimation for the public hearing was not given properly and insisted to carry out the public hearing meeting after wide publicity. He also cautioned that the surrounding villages will get affected due to the establishment of the proposed project and suggested that alternate non polluting Textile based industry may be proposed instead of cement plant there by providing employment for more number of unskilled labours.

**17. Thiru Rathinasalam,Vayalur:**

He said that public have lost reliability on the project proponent and doubtful over their promises on employment offers in the proposed project. He opposed the project.

**The District Environmental Engineer**

He told that any views in written form can also be submitted to TNPCB office,Karur and District Collectorate ,Karur. He also informed that entire proceedings of the Public Hearing are recorded and will be sent to State Level Environment Impact Assessment Authority, Chennai.

**District Revenue Officer**

He assured that all the representations made by the public, related to the nearby Solar Power plant and transport facilities to their villages will be considered by the District Administration.

**The District Environmental Engineer**

He conveyed his thanks to all those who participated in the meeting and the Public Hearing came to an end.

29/1/19

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Karur**

**District Revenue Officer**
**Karur District**

29.01.2019 அன்று காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், வயலூர் கிராமத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். வி.வி. சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்( 600 மெட்ரிக்டன்/ நாளொன்றுக்கு) என்ற உலர்முறை சிமெண்ட் உற்பத்தி ஆலைக்கு வயலூர் கிராமத்தில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்:

பங்கு பெற்றோர்:

1. திரு. ச.சூர்யபிரகாஷ் அவர்கள் ,
   மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் மாவட்டம்.
2. திரு. க. ரவிச்சந்திரன் அவர்கள்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கரூர்.
3. திரு. M. லியாகத் அவர்கள்,
   வருவாய் கோட்டாசியர் குளித்தலை.
4. திரு. R. சேகர் அவர்கள், (முழு கூடுதல் பொறுப்பு)
   வருவாய் வட்டாச்சியர், கிருஷ்ணராயபுரம் வட்டம்.
5. திரு. ச.விஜயபாஸ்கர் அவர்கள்,
   இயக்குனர், தி/ள். வி.வி. சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் மற்றும் பொதுமக்கள்
   (இணைப்பில் உள்ளபடி)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தனது வரவேற்பு உரையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பாகவும், கரூர் மாவட்ட நிர்வாகத்தின் தலைமையிலும், இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். தொடர்ந்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் கூறுகளை தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் அவர் கூறுகையில், சிமெண்ட் உற்பத்தியில் நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் நவீன யுக்திகளையும் எடுத்துரைத்தார். தொடர்ந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிமெண்ட் தொழிற்சாலைகளில் எழும் காற்று மாசு குறித்த விவரங்களையும் அதனை தடுக்கும் விதத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எவ்வாறு செம்மையாகவும் தொடர்ச்சியாகவும் கண்காணித்து வருகிறது என்று விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் இந்தப் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பான செய்தி வெளியீடு 28.12.2018 அன்றே தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் வெளியிடப்பட்டதாகவும், அருகில் உள்ள கிராமங்களில் விளம்பரப் பலகைகள் வைத்ததாகவும் மற்றும் தண்டோரா மூலம் கிராமங்களில் விளம்பரம் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளம் மற்றும் பல்வேறு சமூக ஊடகங்களிலும் இந்தக் கூட்டம் குறித்த தகவல் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது என தெரிவித்தார். மேலும் இக்கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தி தருமாறு மாவட்ட வருவாய் அலுவலரை கேட்டுக்கொண்டார். பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் அறிவுரைபடி திருவாளர்கள். வி.வி. சிமெண்ட் நிறுவனத்தினரைத் தாங்கள் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனம் தொடர்பான தொழில்நுட்ப விவரங்களை பொதுமக்களுக்கு கூறுமாறு அழைத்தார்.

திரு. ச.விஜயபாஸ்கர், தி/ள். வி.வி. சிமெண்ட் பிரைவேட் லிமிடெட், இயக்குனர்:

இவர் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவரையும் வரவேற்றார். தங்கள் நிர்வாகம் ஏற்கனவே இம்மாவட்டத்தில் ஒரு சிறிய தொழிற்சாலையை நடத்தி வருவதாகவும் அதன் தொடர்சியாக அப்பகுதியில் இந்த புதிய சிமெண்ட் தொழிற்சாலையை நிர்மாணிக்க உத்தேசித்து இந்தக் கூட்டத்தை அரசு வழிகாட்டுதல் படி நடத்துவதாக கூறினார். மேலும் இத்தொழிற்சாலையில் இப்பகுதியை சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று உறுதி அளித்தார். மேலும் பொதுமக்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

9

திரு.வரதராஜன், சுற்றுச்சூழல் ஆலோசகர் தி/ள். வி.வி சிமெண்ட் (பி) லிமிடெட்:

இவர் உத்தேசிக்கப்பட்டுள்ள சிமெண்ட் நிறுவனம் தொடர்பான கீழ்க்கண்ட தகவல்களை காணொலி விளக்கப் படத்துடன் விவரித்தார்.

1. திட்டத்தின் அமைவிடம்
2. பூகோல அமைப்பியல் விவரங்கள்
3. மூலப்பொருட்கள்
4. நீர் தேவை
5. காற்று மாசு தடுப்பு சாதனங்கள்
6. மூலப்பொருள் மற்றும் உற்பத்தி பொருட்களை கையாளும் வாகன வழித்தடங்கள்
7. சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும்
8. நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு

மாவட்ட வருவாய் அலுவலர்:

இவர், தனது தொடக்க உரையில் பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்பதாக தெரிவித்தார். மேலும் இந்தத் திட்டம் குறித்து பொதுமக்கள் தங்களின் நேர்மறை மற்றும் எதிர்மறை கருத்துக்களை இங்கே பதிவு செய்யலாம் என்றும் அவை அரசுக்கு கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவித்தார். அவர் கூறுகையில், 1972–ம் ஆண்டு ஸ்டாக்கோம் என்ற இடத்தில் உலக நாடுகள் அனைத்தும் கலந்து கொண்ட கூட்டத்தில் சுற்றுச்சூழல் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும், அக்கூட்டத்தில் மறைந்த பாரத பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களும் கலந்து கொண்டு சுற்றுசூழல் தொடர்பான தனது கருத்துகளை தெரிவித்தார். அதன் அடிப்படையில் பின்னர் சுற்றுச்சூழல் அமைச்சகம் இந்தியாவில் அமைக்கப்பட்டது. அதன்பிறகு மேற்படி அமைச்சம் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் என்றும் மாற்றி அமைக்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் அவர்கள் நீர்நிலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்ததையும் சுட்டிக்காட்டினார். மேலும் இவர் கூறுகையில் உலகளவில் நிலையான அபிவிருத்தி (Sustainable Development) குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் பரவி வருவதாக கூறினார். இது குறித்து உலகளவில் கடந்த 40 ஆண்டுகளாக 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டமைப்பு நடைபெற்று வருவதையும் விவரித்தார். மேலும் எந்தவொரு தொழில் நடவடிக்கையிலும் நேர்மறை மற்றும் எதிர்மறை கூறுகள் இருப்பதாகவும், நேர்மறை கூறுகளை ஏற்றுக்கொண்டும் எதிர்மறை கூறுகளைகூட நேர்மறையாக மாற்றுவதற்கு முனையவேண்டும் என்றும் அறிவுறுதினார். மேலும் தமிழக அரசின் அடிப்படை கொள்கை முடிவுகள் இது சார்ந்தே எடுக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார். மேலும் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் கருத்துக்களை பதிவு செய்வதற்கான கூட்டமே தவிர காரசாரமான விவாதங்கள் தேவையில்லை என்றும் தெரிவித்தார். தொடர்ந்து தனது உரையில் இப்பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ளதாகவும் இதுபோன்ற தொழிற்சாலைகள் இப்பகுதியில் அமைவதால் பொதுமக்களின் வாழ்வாதாரம் கட்டாயம் உயரும் என்றும் தெரிவித்தார். இவ்விடத்தில் தொழிற்சாலை அமையக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அதனை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்தால் அவர்களது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டே முன்னாள் தமிழக முதல்வர் அவர்கள் 2015–2016 ல் Global Investors Meet கொண்டு வந்தார்கள் எனவும் அது இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நடைபெறுவதாகவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் தற்போது 2019 ல் நடத்தியுள்ளதாக தெரிவித்தார். மேலும் பொதுமக்கள் இத்திட்டம் குறித்த சாதக மற்றும் பாதகமான கருத்துகளை கூறவேண்டும் எனவும் அவை முறையாக பதிவுசெய்யப்பட்டு

அரசுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பின்னர் பொதுமக்கள் தங்கள் கருத்துகளை பதிவு செய்யுமாறு கேட்டு கொள்ளப்பட்டது.

**1. M.S. மணி, பஞ்சப்பட்டி:**

இவர் இத்திட்டம் தொடர்பான நன்மை, தீமைகளை ஏற்கனவே அதிகாரிகள் விரிவாக கூறியதாகவும் கரூர் மாவட்டத்தில் வறட்சியான பகுதியில் அமைந்துள்ள வயலூர், வீரியம்பாளையம், பாப்பக்காப்பட்டி போன்ற கிராமங்கள் எந்தவிதமான தொழில் வளமும் இல்லாத பகுதியாகவும் முழுமையாக மழையை எதிர்பார்த்து இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் இப்பகுதிகளில் இருந்து பெருவாரியான பொதுமக்கள் அனைவரும் வேலைக்காக கரூரை நோக்கியே சென்று கொண்டிருப்பதாகவும் இது போன்ற தொழிற்சாலை இப்பகுதியில் அமைந்தால் படித்த இளைஞர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றும் தெரிவித்தார். இவர் இத்திட்டத்தை வரவேற்றார்.

**2. நாகராஜன், Ex-Councillor, கடவூர்:**

இவர் கூறுகையில், ஏற்கனவே கரிக்காலி பகுதியில் ஒரு சிமெண்ட் ஆலை பல்வேறு வாக்குறுதிகளை கூறி நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் அந்நிறுவனம் இன்றுவரை எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என்று தெரிவித்தார். அதுகுறித்து நீதிமன்றம் மூலம் இன்றுவரை போராடி வருவதாக தெரிவித்தார். மேலும் நிறுவனங்கள் பொதுமக்களுக்கு தாங்கள் தரும் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த புதிய நிறுவனத்தில் உள்ளூரைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். மேலும் மாவட்ட நிர்வாகம் வறட்சியான இப்பகுதியை வளமாக்கும் பொருட்டு காவிரியில் இருந்து பஞ்சப்பட்டி ஏரிக்கு நீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்தார்.

**3. சுப்ரமணியன், வயலூர் கிராமம்:**

இவர் கூறுகையில் இப்பகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருப்பதாகவும் அருகில் உள்ள பஞ்சப்பட்டி ஏரி மேடான பகுதியாக இருந்தாலும் ஆந்திரா மாநிலத்தில் அமைக்கப்பட்டதுபோல் தடுப்பணை அமைத்து காவிரி ஆற்றில் இருந்து வாய்க்கால் மூலம் நீர் வழங்கினால் இப்பகுதி செழிப்பாகும் என்று ஆலோசனை வழங்கினார். மேலும் பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு இல்லாமல் இந்நிறுவனம் அமைக்கப் பெற்றால் வரவேற்பதாக தெரிவித்தார்.

**4. முத்தமிழ்ச்செல்வன், சுரக்காப்பட்டி:**

இவர் கூறுகையில் தான் இத்திட்டம் அமையக்கூடிய இடத்திற்கு அருகாமையில் வசிப்பதாகவும், ஆலை நிர்வாகத்தினர் தங்களது காணொலியில் சுரக்காப்பட்டி மற்றும் அய்யம்பாளையம் போன்ற கிராமங்களை கணக்கில் எடுக்காமல் நடுப்பட்டியை மட்டும் வரைபடத்தில் காட்டி குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் வறட்சியான அப்பகுதியில் இந்நிறுவனத்தின் மூலம் காற்று மாசு அதிகரிக்கும் வாய்ப்புதான் உள்ளதாக தெரிவித்தார். மேலும் இப்பகுதியில் வாழும் பொதுமக்கள் போதிய படிப்பறிவு இல்லாமல் இருப்பதாகவும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக இந்நிறுவனம் கூறுவது எந்த அளவுக்கு சாத்தியம் என்ற கேள்வியை எழுப்பினார். மேலும் ஆலையில் இருந்து வெளியேறுகின்ற கழிவுநீரை பொதுமக்களுக்கும் ஆடு மாடுகளுக்கும் பாதிப்பு இல்லாமல் செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். மேலும் இம்மாதிரியான ஆலைகள் வரும்போது அதைப் பாதுகாப்பாக நடத்துவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். பஞ்சப்பட்டியில்அமைந்துள்ள ஏரிக்கு நீர் வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

**5.ராஜலிங்கம், உப்பிலிப்பட்டி:**

இவர் கூறுகையில் தனக்கு சொந்தமான நிலம் தொழிற்சாலை அமையவுள்ள பகுதியின் இடையே அமைந்துள்ளதாகவும் இத்தொழிற்சாலை அமைந்தால் தனது இடத்திற்கு செல்ல பாதை இருக்காது என

தெரிவித்தார். இது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

**6. C. தங்கவேல், நடுப்பட்டி:**

இவர் கூறுகையில் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை இவ்விடத்தில் அமைக்கப்படும் பொழுது அனைத்து பாதுகாப்பு நடைமுறைகளையும் கடைபிடிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். மேலும் தங்கள் பகுதியில் அமைந்துள்ள பஞ்சப்பட்டி ஏரிக்கு மாயனூர் பகுதியில் உள்ள காவிரி ஆற்றில் இருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார் இவர் இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**7. பழனிச்சாமி, கருப்பத்தூர்:**

இவர் இத்திட்டத்தை வரவேற்றார். தொடர்ந்து இவர் கூறகையில் ஏற்கனவே இப்பகுதியில் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு இப்பகுதி மக்கள் நிலங்கள் வழங்கியதாகவும், அந்நிறுவனம் அதிக எண்ணிக்கையில் ஆழ்குழாய் கிணறுகளை அமைத்ததால் இப்பகுதியில் நிலத்தடி நீர் வெகுவாக பாதிப்புக்கு உள்ளனதாக தெரிவித்தார். மேலும் இத்தொழிற்சாலையில் இப்பகுதி மக்களுக்கு வேலையில் முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும், இந்த புதிய நிறுவனத்திற்கு இங்கு உள்ள ஆழ்குழாய் கிணற்றின் மூலம் தண்ணீர் எடுக்காமல் வேறு இடத்திலிருந்து நீர் கொண்டுவரவேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும் இப்பகுதியில் உள்ள கிராமங்கள் பயன்பெறும் வகையில் குளங்களை நிரப்பிய பின்னரே இந்த புதிய ஆலையை தொடங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

**8.சுப்ரமணி, வயலூர்:**

இவர் கூறுகையில், தான் ஒரு பொறியியல் பட்டதாரி எனவும், தன்னைப்போல் பலர் இப்பகுதியில் போதிய கல்வி தகுதி இருந்தும் உரிய வேலைவாய்ப்பு இல்லாமல் தவிப்பதாக கூறினார். ஏற்கனவே இப்பகுதியில் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதி அளித்து இப்பகுதியில் அமைக்கப்பட்ட சூரிய ஒளி சக்தி நிறுவனம் தாங்கள் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்றும் தனது வருத்தத்தை தெரிவித்தார். மேலும் பஞ்சப்பட்டி ஏரியிலிருந்து வயலூர் ஏரிக்கு உபரிநீர் வரும் கால்வாயை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இவர் இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**9.சண்முகம் கரூர்:**

இவர் கூறுகையில் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை குறித்தான பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் தொடர்பான செய்தி வெளியீடோ, தகவல்களோ முறையாக பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். மேலும் இந்த தொழிற்சாலை அமைய பெற்றால் இங்குள்ள கொதிகலன்களில் எரியூட்டப்படும் நிலக்கரியின் வேதி தன்மைகள் உற்பத்தியாகும் புகையில் கலந்து அருகில் உள்ள பொதுமக்களுக்கும், விளைநிலங்களுக்கும் மற்றும் ஆடு மாடுகளுக்கும் கேன்சர் போன்ற நோய் பாதிப்பு ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார். ஏற்கனவே தமிழக அரசு புவி வெப்பமயமாக்கலை தடுக்க லட்சக்கணக்கில் மரக்கன்றுகளை நட அறிவுறுத்துகிறது. ஆனால் புவியின் வெப்பநிலையை உயர்த்தும் கரியமிலவாயுவை உற்பத்தி செய்யும் இதுபோன்ற தொழிற்சாலைகள் தேவையா என்ற கேள்வியை எழுப்பினார். மேலும் நிறுவனத்தினர் சமர்ப்பித்துள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் மூலப்பொருட்களை ஓமன் நாட்டில் இருந்து நிறுவனத்திற்கு கொண்டுவந்து சேர்க்கும் தரைவழி போக்குவரத்து குறித்தான விரிவான விவரங்கள் இல்லை என்றும் தெரிவித்தார். அப்பகுதியில் இந்நிறுவனம் அமைந்தால் எதிர்வரும் 10 ஆண்டுகளில் அப்பகுதி பாலைவனமாக மாறிவிடும் என்றும் தெரிவித்தார். இவர் இத்திட்டத்தை முழுமையாக நிராகரிப்பதாக தெரிவித்தார்.

**10.பாலசுப்ரமணி, நடுப்பட்டி:**

இவர் நடுப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் எனவும் தங்கள் கிராமத்தில் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் தொடர்பான முறையான அறிவிப்பு இல்லை எனவும் தங்கள் கிராமத்தில் இருந்து 20 பேர் கூட

வரவில்லை என்றும் தனது வருத்தத்தை தெரிவித்தார். எனவே, இதுகுறித்த அறிவிப்பை முறையாக வெளியிட்ட பிறகு கூட்டத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

11.வீரமலை,வயலூர்

இவர் கூறுகையில் பஞ்சப்பட்டியில் புங்காத்து ஆறு ஓடுகிறது எனவும் தாமரைப்பட்டியில் குறுக்கே தடுப்பணைக் கட்டி வடிகால் அமைத்துத் தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். மேலும் இத்திட்டம் அமைய பெறும்போது பெரிய அளவிலான ஆழ்குழாய் கிணறுகளை நிறுவக்கூடாது என்று கேட்டுக்கொண்டார். மேலும் இந்நிறுவனம் உள்ளூர்காரர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார். இவர் இத்திட்டத்தை வரவேற்றார்.

12. தமிழ்ச்செல்வன், வீரணாம்பட்டி:

இவர் கூறுகையில் இந்த ஆலை அமைப்பதால் 500 மீ தொலைவில் உள்ள தங்களது மானாவாரி நிலம் பாதிக்கும் எனவும் சிமெண்ட் தொழில்சாலை அமைப்பதால் ஏற்படும் பாதிப்பை தடுக்க மாற்று ஏற்பாடாக ஏதாவது ஜவுளி ஆலையைக் கொண்டுவரலாம் என்றும் ஆலோசனை கூறினார். மேலும் பஞ்சப்பட்டி ஏரிக்கு தண்ணீர் கொண்டு வந்தால் அருகில் உள்ள கிராமங்கள் பயன்பெறும் என்று கூறினார். சூரிய ஒளி சக்தி நிறுவனம் தாங்கள் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்றும் தனது வருத்தத்தை தெரிவித்தார். மேலும் பஞ்சப்பட்டி ஏரியிலிருந்து வயலூர் ஏரிக்கு உபரிநீர் வரும் கால்வாயை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

13. சிவா, வயலூர்:

இவர் கூறுகையில் தங்கள் ஊரில் நிலத்தடி நீர் ஏற்கனவே குறைவாக உள்ளது எனவும் தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கும்போது இந்த ஆலையை அமைத்தால் இப்பகுதியில் வறட்சி ஏற்படும். மேலும் தங்கள் பகுதிக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

14. சிவக்குமார், முனையனூர்:

இவர் சிமெண்ட் ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுகளால் விவசாய நிலங்களில் பாதிப்பு ஏற்படுவதாகவும் அதனால் மாற்றாக கனிம வளங்களை பாதுகாக்கும் பொருட்டு வேறு தொழிற்சாலை அமைந்தால் நல்லது என்றும் தெரிவித்தார். இவர் இந்த திட்டத்தை நிராகரித்தார்.

15. சரவணன், வீரியபாளையம்:

இவர் கூறுகையில் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் குறித்து தங்கள் பகுதியில் எந்த அறிவிப்பும் தரப்படவில்லை எனவும் இதுகுறித்து முறையாக ஊராட்சிகளுக்கு தெரிவித்து இருக்கலாம் என்றும் ஆலோசனை கூறினார். மேலும் சிமெண்ட் ஆலைக்கு மாற்றாக ஜவுளி போன்ற ஆலைகள் அமைந்தால் மாசு கட்டுக்குள் இருக்கும் என்றும் தெரிவித்தார். மேலும் அதன் மூலம் அதிக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்றும் தெரிவித்தார். எனவே இதுகுறித்து அரசு மறுபரிசீலிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

16. கார்த்திக், வயலூர்:

இவர் நீர் ஆதாரமே இல்லாத இப்பகுதியில் எவ்வாறு இந்நிறுவனம் 55000 லி தண்ணீர் எடுக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார். மேலும் இந்த ஆலையினால் மாசு அதிகமாகும் என்றும் தெரிவித்தார். எனவே இந்த தொழிற்சாலைக்கு மாற்றாக ஜவுளி போன்ற தொழிற்சாலை அமைய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். மேலும் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் குறித்த முறையான தகவலை தெரிவித்த பிறகு இந்த கூட்டத்தனை நடத்த வேண்டும் என்று கோரினார்.

17. இரத்தினாசலம், வயலூர்:

இவர் கூறுகையில் இந்த ஆலையின் மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும், இந்த ஆலை அமைப்பதன் மூலம் 150 பேருக்கு மட்டுமே வேலை தர இயலும் என்றால் மற்றவர்களின் நிலை என்ன என்ற கேள்வியை எழுப்பினார். எனவே தங்கள் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இந்த ஆலை எங்களுக்கு வேண்டாம் என்று தெரிவித்தார்.

௧௫

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

பொதுமக்கள் இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கூறிய அனைத்துக் கருத்துகளும் பதிவு செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்தார். மேலும் இத்திட்டம் குறித்து மனு கொடுக்க விரும்புவோர்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய கரூர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் கொடுக்கலாம் என்றும் தெரிவித்தார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர்:</u>

பொதுமக்கள் சூரிய ஒளி சக்தி ஆலைகுறித்து கூறிய கோரிக்கைகளும், இப்பகுதிக்கு போக்குவரத்து வசதி சார்ந்த கோரிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய்அலுவலர், வருவாய் கோட்டாச்சியர் குளித்தலை, வருவாய் வட்டாசியர் கிருஷ்ணராயபுரம் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர் மாவட்டம்.